IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II SRIVILLIPUTTUR
C.C. No.5/2017

**PW - 6 Cross**

Name: **திரு. ராஜவேல்**

S/o : **செந்தூரப்பன்**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of October 2025.

<u>14.10.2025</u>

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் புகார்தாரர் மீது இவ்வழக்கின் எதிரி இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக புகார் ஒன்றை எங்கள் காவல்நிலையத்தில் கொடுத்து அது குற்ற எண்.17/2016 ஆக பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.9/2017 ஆக நிலுவையிலுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கும் இவ்வழக்கும் ஒரே நாளில் ஒரே சம்பவத்தை பற்றிய வழக்கு மற்றும் எதிர்வழக்கு என்றால் அதுபற்றி எனக்கு தற்போது நியாபகமில்லை. போலீசார் விசாரணையிலும் அ.சா.1 தன்னை பீர் பாட்டிலால் தலையில் அடித்ததாகத்தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் அ.சா.1 தன்னை தெரிந்த நபர் பாட்டிலாலும், கம்பாலும் அடித்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 தனது புகார் மற்றும் போலீசார் விசாரணையில் கொடுத்த வாக்குமூலத்தில் அ.சா.2 முத்துகிருஷ்ணன், அ.சா.3 சுமதி, ஆகியோர் சத்தம்கேட்டுத்தான் வந்து விலக்கிவிட்டதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் 04.20 மணிக்கு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனைவில் சிகிச்சைக்காக சேர்ந்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கியதாக கூறப்படும் கம்பு மற்றும் பாட்டில் போன்றவற்றை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரருக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் அதிர்ஷ்டகுமார் மீது பல வழக்குகள் நிலுவையிலுள்ளது மற்றும் பல வழக்குகள் முடிவு பெற்றது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் ராமர் கடையின் முன்பு சம்பவத்தின்போது அதிகமாக ஆட்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில்

தனிப்பட்ட சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் கூறியவாறு சொன்ன மாதிரி, சொன்ன விதத்தில் புகார்தாரர் புகார் கொடுக்கவில்லை என்றாலும், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக வழக்கு மற்றும் எதிர்வழக்கு உள்ளதால் காவல்நிலையாணைகளை நான் பின்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை சரிவர புலன் விசாரணை செய்யாமல் பொய்யான புகார் மனுவை பெற்று, பொய்யான குற்றஇறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் தொடர்பாக வழக்கு மற்றும் எதிர் வழக்கு உள்ளதால் அதனை தனித்தனி சார்பு ஆய்வாளர் தான் விசாரித்திருக்க வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.